# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.
## Case No. CC.No. 148 of 2023
## Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திரு. பிரபு | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.16.07.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம் ராம்ஜி நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் வாசுதேவன் என்பவருடைய கையொப்பம் நன்கு பரிட்சயம் பெற்றதால் ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.01.2023–ம் தேதி உதவி ஆய்வாளர் வாசுதேவன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது சரண்ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 21/2023, இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் 21 மணிக்கு வழக்கினை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4/அ.சா.5** ஆகும். பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை எனது விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். நான் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்

கொண்டு கடந்த 09.01.2023ம் தேதி காலை 6 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுப்பையா, மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5/அ.சா.5** ஆகும். பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 09.01.2023ம் தேதி காலை 10 மணியளவில் இலால்குடி அரசு மருத்துவமனை சென்று வழக்கு விபத்தில் இறந்துபோன மணிகண்டன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6/அ.சா.5** ஆகும். இவ்வழக்கில் இறந்துபோன பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக சுந்தர் இரண்டாம்நிலை காவலர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். பட்டியல் சாட்சிகளான 4 முதல் 6 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிந்து எதிரியை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியை கடந்த 10.01.2023ம் தேதி 12.30 மணியளவில் நிலையத்தில் ஆஜரானவரை குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். இவ்வழக்கில் விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் முகமது மீரா என்பவருக்கு அனுப்பி வைத்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றேன். TN 61 L 2061 என்ற வாகனத்திற்கு வழங்கப்பட்ட வாகன தணிக்கை சான்று **அ.சா.ஆ.7/அ.சா.5** ஆகும். TN 20 CX 8490

என்ற வாகனத்திற்கு வழங்கப்பட்ட வாகன தணிக்கை சான்று **அ.சா.ஆ.8/அ.சா.5** ஆகும். இவ்வழக்கில் இறந்துபோன மணிகண்டன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் பிரபாகரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். மணிகண்டன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9/அ.சா.5** ஆகும். இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 11, 12 யை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கடந்த 23.05.2023 அன்று தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

வழக்கு கோப்பை நான் எப்போது விசாரணைக்காக எடுத்துக் கொண்டேன் என்றால் 08.01.2023 ம் தேதி இரவு 23.30 மணிக்கு வழக்கு கோப்பை நான் விசாரணைக்காக எடுத்துக் கொண்டேன். உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கையானது 01.08.2023 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் வழக்கை பதிவு செய்த அன்றே நீதிமன்ற காவலரிடம் முதல் தகவல் அறிக்கை ஒப்படைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையானது நீதிமன்றத்தில் 01.08.2023 அன்று தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏன் முதல் தகவல் அறிக்கை காலத்தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றிய விவரம் எனக்கு

தெரியாது. விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் மகேந்திரா பொலிரோ பிக்அப் வாகனமானது சம்பவ சமயத்தில் என்ன லோடு ஏற்றிக் கொண்டு வந்தது என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேன். ஆனால் அந்த வாகனத்தில் ஏற்றி வந்த லோடு குறித்து விசாரணை செய்யவில்லை. விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் மகேந்திரா பொலிரோ பிக்அப் வாகனத்தில் என்ன லோடு ஏற்றி வந்தது என்பது குறித்து நான் விசாரணை செய்யாத காரணத்தினால் தான் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் மகேந்திரா பொலிரோ பிக்அப் வாகனத்தில் யார் யார் வந்தார்கள் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மகேந்திரா பொலிரோ பிக்அப் வாகனத்தில் வந்த நபர்களை விசாரணை செய்து அவர்களிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் விபத்தை ஏற்படுத்திய போது மகேந்திரா பொலிரோ பிக்அப் வாகனத்தில் ஓட்டுநர் மட்டும் தான் இருந்தார். சம்பவ சமயத்தில் மகேந்திரா பொலிரோ பிக்அப் வாகனத்தில் ஜல்லிக்கட்டுக்கு ஏற்றி வந்த மாடும், அதனுடன் 4 நபர்கள் இருந்தார்கள் என்றாலும், நான் சரியாக புலன் விசாரணை செய்யாத காரணத்தினால் தான் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்திற்கு மேற்கே அரியூர் பஸ் ஸ்டாப் உள்ளதாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு மேற்கே அரியூர் பஸ் ஸ்டாப் இல்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு கிழக்கே தான் அரியூர் பஸ் ஸ்டாப் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாத காரணத்தினால் தான் எனக்கு அரியூர் பஸ்

ஸ்டாப் எங்குள்ளது என சரியாக தெரியாமல்,தவறான மாதிரி வரைபடத்தை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 அவர் அளித்த புகாரில் பொலிரோ பிக்அப் வாகனமானது முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயன்றபோது விபத்து ஏற்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் தான் மது அருந்திவிட்டு இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடதுபுற ஓரமாக நின்று கொண்டிருந்த பொலிரோ பிக்அப் வாகனத்தின் முன் இடதுபுறத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து இயந்திரத்தனமாக தயார் செய்யப்பட்டது என்றாலும்,இந்த வழக்கு எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.16 12:44:39 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி